Essar Securities Limited
Essar House,
11, K. K. Marg,
Mahalaxmi,
Mumbai- 400 034
CIN:L65990TN2005PLC071791

T +91 22 6660 1100
F +91 22 2354 4789

E:eslinvestors@essar.com
www.essar.com

November 12, 2022

To,
BSE Limited
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai 400 001.

Sub: Submission of News Paper Advertisement in relation to Extract of Standalone unaudited Financial Results for the Quarter and half year ended September 30, 2022.

Stock : BSE: Essar Securities Limited

Code : BSE 533149 ISIN: INE143K01019

Dear Sir,

Pursuant to Regulation 30 read with Schedule III Part A and in Compliance of Regulation 47(1) (a) of Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, regarding extract of Standalone unaudited Financial Results for the Quarter and half year ended September 30, 2022 which was approved by the Board of Directors of the Company at their meeting held on Friday, November 11, 2022.

We are attaching copies of the newspaper advertisement published on November 12, 2022 in Business Standard (English) and Makkal Kural (Tamil).

You are requested to please take on record our above said information for your reference and records.

Thanking you,

Yours faithfully,
For Essar Securities Limited

Received

Rachana H Trivedi
Company Secretary & Compliance Officer
Membership No: A62289

ESSAR

ESSAR SECURITIES LIMITED

Registered Office: 56, New No. 77, C. P. Ramaswamy Road, Abhiramapuram, Chennai - 600 018.
Tel.: +91 44 2499 1992 • **Fax:** +91 44 2499 4922 • **Email Id:** eslinvestors@essarservices.co.in
CIN: L65990TN2005PLC071791

EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2022

₹ In Lakhs

Particulars	Quarter Ended			Half Year Ended		Year Ended
	30.09.2022	30.06.2022	30.09.2021	30.09.2022	30.09.2021	31.03.2022
	Un-Audited	Un-Audited	Un-Audited	Un-Audited	Un-Audited	Audited
Income from operations	2.85	2.85	8.00	5.70	16.00	25.35
Other Income					-	-
Total Income	**2.85**	**2.85**	**8.00**	**5.70**	**16.00**	**25.35**
Net Profit / (Loss) for the year (before Tax, Exceptional items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Net Profit / (Loss) for the year before tax (after Exceptional Items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Net Profit / (Loss) for the year after tax (after Exceptional items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Total Comprehensive Income for the period [comprising profit/(loss) for the year and other comprehensive income]	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Paid up Equity Share Capital (Face Value : ₹ 10 per share)	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78
Other Equity (excluding revaluation reserves)						-1,339.56
Earnings Per Share (Basic) (₹)*	(0.008)	(0.037)	0.003	(0.05)	0.04	0.063
Earnings Per Share (Diluted) (₹)*	(0.008)	(0.037)	0.003	(0.05)	0.04	0.063
(*Not Annualised)						

Note-:

(i). The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on November 11, 2022.

(ii). The above is an extract of the detailed format of unaudited Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the websites of the Stock Exchange, bseindia.com and the company's website, www.essar.com.

For and on behalf of the Board of Directors
Sd/-
Somashekhar B Malagi
Director
DIN: 07626139

Place: Mumbai
Date: November 11, 2022

ESSAR

ESSAR SECURITIES LIMITED

Registered Office: 56, New No. 77, C. P. Ramaswamy Road, Abhiramapuram, Chennai - 600 018.
Tel.: +91 44 2499 1992 • **Fax:** +91 44 2499 4922 • **Email Id:** eslinvestors@essarservices.co.in
CIN: L65990TN2005PLC071791

EXTRACT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2022

₹ In Lakhs

Particulars	Quarter Ended			Half Year Ended		Year Ended
	30.09.2022	30.06.2022	30.09.2021	30.09.2022	30.09.2021	31.03.2022
	Un-Audited	Un-Audited	Un-Audited	Un-Audited	Un-Audited	Audited
Income from operations	2.85	2.85	8.00	5.70	16.00	25.35
Other Income					-	-
Total Income	**2.85**	**2.85**	**8.00**	**5.70**	**16.00**	**25.35**
Net Profit / (Loss) for the year (before Tax, Exceptional items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Net Profit / (Loss) for the year before tax (after Exceptional Items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Net Profit / (Loss) for the year after tax (after Exceptional items)	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Total Comprehensive Income for the period [comprising profit/(loss) for the year and other comprehensive income]	**(1.11)**	**(5.34)**	**0.42**	**(6.45)**	**6.23**	**9.04**
Paid up Equity Share Capital (Face Value : ₹ 10 per share)	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78	1,428.78
Other Equity (excluding revaluation reserves)						-1,339.56
Earnings Per Share (Basic) (₹)*	(0.008)	(0.037)	0.003	(0.05)	0.04	0.063
Earnings Per Share (Diluted) (₹)*	(0.008)	(0.037)	0.003	(0.05)	0.04	0.063
(*Not Annualised)						

Note-:

(i). The above results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on November 11, 2022.

(ii). The above is an extract of the detailed format of unaudited Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing and Other Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the websites of the Stock Exchange, bseindia.com and the company's website, www.essar.com.

For and on behalf of the Board of Directors
Sd/-
Somashekhar B Malagi
Director
DIN: 07626139

Place: Mumbai
Date: November 11, 2022

காந்தி கிராம பல்கலைக்கழகத்தில் 2,314 பேருக்கு பட்டம்: இளையராஜா, உமையாள்புரம் சிவராமனுக்கு கவுரவ டாக்டர் பட்டம்

கிராமப்புற பெண்களின் வெற்றி தேசத்தின் வெற்றி: பிரதமர் மோடி பேச்சு

திண்டுக்கல், நவ. 12

கிராமப்புற பெண்களின் வெற்றி தேசத்தின் வெற்றி ஆகும் என்று காந்தி கிராம பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பிரதமர் மோடி பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமத்தில் அமைந்துள்ள காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகத்தில் 36வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. விழாவில் பிரதமர் நரேந்திரமோடி கலந்து கொண்டு இசையமைப்பாளர் இளையராஜா, மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமன் ஆகியோருக்கு கவுரவ டாக்டர் பட்டம் உட்பட 2,314 பேருக்கு பட்டம் வழங்கினார்.

விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது:- காந்திகிராமத்திற்கு வருவது மிகவும் உத்வேகமான அனுபவம். கிராம மக்களின் எளிமையான வாழ்க்கை, மிகதம் மகாத்மா காந்தியை மிகவும் கவர்ந்தது. காந்திய வழியிலான வாழ்க்கை, இளைஞர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். மகாத்மா காந்தியின் சிந்தனை இன்றைய காலகட்டத்துக்கு மிகவும் பொருத்தமானதாக இருக்கிறது. அவருடைய கருத்து உலகம் எதிர்கொள்ளும் பல சவால்கள், பல பிரச்சினைகளுக்கு பதிலை தருகின்றன.

காதி புத்துயிர் பெற்றுள்ளது

நீண்ட நாட்களாக புறக்கணிக்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட காதி தற்போது புத்துயிர் பெற்று இருக்கிறது. கடந்த 8 ஆண்டுகளில், காதி துறையின் விற்பனை 300 சதவீதம் அதிகரித்து உள்ளது. "காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் கடந்த ஆண்டு ரூ.1 லட்சம் கோடிக்கு மேல் வருவாய் ஈட்டி இருக்கிறது. காதி சுற்றுச்சூழலுக்கு ஏற்றது என்பதால் உலகளாவிய பேஷன் பிராண்டுகள் கூட காதியை ஏற்று கொண்டுள்ளன. கிராமங்களில் காதியை தன்னிறைவுக்கான ஒரு கருவியாக மகாத்மா காந்தி பார்த்தார்.

சுதேசி இயக்கத்தின் முக்கிய மையமாக தமிழ்நாடு இருந்தது. கிராமப்புற மேம்பாட்டை நோக்கிய அரசாங்கத்தின் தொலைநோக்கு பார்வை, மகாத்மா காந்தியின் லட்சியங்களில் இருந்து உத்வேகம் பெறுகிறது. நகரம், கிராமங்களுக்கு இடையே வளர்ச்சியில் வேறுபாடு இருக்க கூடாது. கிராமங்களின் முன்னேற்றமே நாட்டின் வளர்ச்சி.

கிராமங்கள் முழுமையான சுகாதாரம் பெறுவதற்கு தூய்மை பாரதம் இயக்கம் செயல்படுத்தப்படுகிறது. அதேபோல் 6 கோடி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு மற்றும் 2.5 கோடி மின் இணைப்புகள் மற்றும் கிராமங்களை சாலைகள் மூலம் இணைக்கப்படுகின்றன.

2 லட்சம் கிராம பஞ்சாயத்துகளை இணைக்கும் வகையில் 6 லட்சம் கி.மீ. தொலைவுக்கு பைபர் கேபிள் இணையதள இணைப்பு வழங்கப்பட்டு உள்ளது. கிராமப்புற வளர்ச்சியில் நீடித்து நிலைக்க வேண்டியது அவசியம். நிலவரைபடம் தயாரித்தல், விவசாயத்துக்கு டிரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இளைஞர்கள் இதுபோன்ற துறைகளில் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும். கிராமப்புறங்களின் எதிர்காலத்திற்கு நிலையான விவசாயம் மிகவும் முக்கியமானது. இயற்கை விவசாயத் திட்டம் பல மாற்றங்களை செய்து வருகிறது. ரசாயனம் இல்லாமல் இயற்கை விவசாயத்தில் இளைஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும்.

மண் வளமே, மனித நலம்.

சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட சிறுதானியங்கள் ஆரோக்கியம் நிறைந்ததாக மண் மற்றும் நீர் வளங்களுக்கு பாதுகாப்பானதாகவும் இருந்தன. அதனை நாம் இயற்கை விவசாயம் மூலம் மீட்டெடுக்க வேண்டும். இயற்கை விவசாயம் தான் மண் வளத்தை பாதுகாக்கும். மண் வளமே, மனித நலம்.

கிராமப்புறங்களில் சூரிய ஒளி மூலம் மின்சார உற்பத்தியை தொடங்கினால், மின்துறையில் நாடு தன்னிறைவு பெறும். குற்றங்களை தடுக்கவும் போதைப் பழக்கங்களிலிருந்து விடுபடவும், சமூக விரோத செயல்களில் விடுபடவும் காந்தியத்தை இளைஞர்கள் பின்பற்ற வேண்டும்.

மகாத்மா காந்தி ஒன்றுபட்ட சுதந்திர இந்தியாவுக்காகப் போராடினார். காந்தி கிராமமே இந்தியாவின் ஒருமைப்பாட்டின் கதை. தமிழ்நாடு எப்போதுமே தேசிய உணர்வின் தாயகமாக இருந்து வருகிறது. காசியில் விரைவில் நடைபெற உள்ள காசி தமிழ் சங்கமம் அனைவருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளது.

ஒருவருக்கொருவர் அன்பு, மரியாதை அளிப்பதே நமது ஒற்றுமைக்கு அடிப்படையாக இருக்கிறது. இளைஞர்கள் நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்டுவதில் முக்கிய பங்காற்ற வேண்டும்.

ராணி வேலு நாச்சியார் இங்கு தங்கியிருந்து ஆங்கிலேயர்களை எதிர்த்து போரிட்டார். வேலுநாச்சியாரை போன்று இங்கு பட்டம் பெறும் இளம் பெண்களை மிகப் பெரிய மாற்றம் செய்பவர்களாக நான் பார்க்கிறேன். கிராமப்புற பெண்கள் வெற்றி பெற உதவ வேண்டும். கிராமப்புற பெண்களின் வெற்றி தேசத்தின் வெற்றி ஆகும்.

இந்தியாவின் சாதனை எதிர்காலம் இளைஞர்களின் கைகளில் உள்ளது. இளைஞர்கள் சவால்களை ஏற்றுக்கொள்வது மட்டுமல்லாமல், அவற்றை அனுபவித்து சாதிக்கின்றனர். கேள்வி கேட்பதோடு மட்டுமல்லாமல், பதில்களை கண்டு பிடிக்கின்றனர். அச்சமற்றவர்கள் மட்டுமல்ல, அசராதவர்கள். ஆசைப்படுவது மட்டுமல்லாமல் சாதிக்கவும் செய்கிறார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என். ரவி, மத்திய இணை மந்திரி எல். முருகன், பல்கலைக்கழக வேந்தர் அண்ணாமலை, துணை வேர்ந்தர் குர்மித்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழக மக்களின் அன்புக்கு நன்றி: மோடி டுவிட்

மதுரை,நவ.12

தமிழக மக்கள் காட்டிய அரவணைப்பு மிகச்சிறப்பாக இருந்தது. அவர்களது அன்புக்கு நன்றி என்று பிரதமர் மோடி டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம பல்கலைக்கழக 36வது பட்டமளிப்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். அங்கு நிகழ்ச்சியை முடித்து கொண்டு வானிலை காரணமாக ஹெலிகாப்டருக்கு பதிலாக பிரதமர் மோடி கார் மூலம் மதுரை விமான நிலையம் புறப்பட்டார்.

இதையடுத்து திண்டுக்கல் மற்றும் மதுரை மாவட்டங்களின் போலீசார் உஷார்படுத்தப்பட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் அம்பாத்துரையில் இருந்து மதுரை விமான நிலையத்திற்கு சுமார் 65 கிலோ மீட்டர் தூர பயணம் ஆகும்.

எனவே விழா நடந்த இடத்தில் இருந்து முதலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அதை தொடர்ந்து கவர்னர் ஆர். என்.ரவி ஆகியோர் கார்களில் மதுரை புறப்பட்டனர்.

சற்று நேரம் கழித்து பிரதமர் மோடியின் கார் மதுரை விமான நிலையம் நோக்கி புறப்பட்டது. திண்டுக்கல்-மதுரை நான்கு வழிச்சாலையில் கொடைரோடு, வாடிப்பட்டி, நகரி, சமயநல்லூர், நாகமலை புதுக்கோட்டை, கப்பலூர் வழியாக மதுரை விமான நிலையத்திற்கு 42 நிமிடத்தில் பிரதமரின் கார் வந்தடைந்தது. கப்பலூர் உள்ளிட்ட சில இடங்களில் பொதுமக்கள் கூட்டமாக நின்று கையசைத்து பிரதமரை வரவேற்றனர்.

மாலை 6.25 மணியளவில், தனி விமானம் மூலம் பிரதமர் மோடி மதுரையில் இருந்து புறப்பட்டு, விசாகப்பட்டினம் சென்றார். அவரை வழி அனுப்பிய பின்னர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என்.ரவி, முன்னாள் முதலமைச்சர்கள் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், பாரதீய ஜனதா மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் அதிகாரிகள், பிரமுகர்கள் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டனர்.

பிரதமர் மோடி, தனது டுவிட்டரில், திண்டுக்கல்லில், மகாத்மா காந்திஜியோடு நெருங்கிய தொடர்புடைய இடத்தில் இருந்தது, மறக்க முடியாத நாளாக அமைந்துள்ளது. தமிழக மக்கள் காட்டிய அரவணைப்பு மிகச்சிறப்பாக இருந்தது. அவர்களது அன்புக்கு நன்றி என்று பதிவிட்டுள்ளார்.

திண்டுக்கல்லில் அளிக்கப்பட்ட மிகச் சிறப்பான வரவேற்பால் அகமகிழ்ந்தேன்'' என்றும் மோடி கூறியிருக்கிறார்.

இந்தியாவில் புதிதாக 833 பேருக்கு கொரோனா

புதுடெல்லி, நவ. 12-

இந்தியாவில் புதிதாக 833 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கொரோனா தொற்றால் இதுவரை 4 கோடியே 46 லட்சத்து 65 ஆயிரத்து 643 பேர் பாதிக்கப்பட்டனர். கொரோனாவுக்கு சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 12,553 ஆக உள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து இதுவரை குணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 4 கோடியே 41 லட்சத்து 22 ஆயிரத்து 563 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்புக்கு கடந்த 24 மணி நேரத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் இதுவரை கொரோனாவுக்கு 5 லட்சத்து 30 ஆயிரத்து 528 பேர் உயிரிழந்துள்ளனர்.

சென்னையில் 18 பேர் பாதிப்பு

தமிழகத்தில் நேற்று புதிதாக 47 ஆண்கள், 37 பெண்கள் உள்பட மொத்தம் 84 பேருக்கு புதிதாக கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக சென்னையில் மட்டும் 18 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. சென்னை மற்றும் கன்னியாகுமரி தவிர்த்து மற்ற மாவட்டங்களில் தொற்று பாதிப்பு 10க்கும் கீழ் பதிவாகியுள்ளது. அந்த வகையில் தமிழகத்தில் 23 மாவட்டங்களில் கொரோனா தொற்று பதிவாகியுள்ளது. தேனி, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட 15 மாவட்டங்களில் பாதிப்பு இல்லை.

தொற்றால் எந்த மாவட்டத்திலும் உயிரிழப்பு ஏற்படவில்லை. கொரோனா பாதிப்புக்குள்ளாகி 826 பேர் சிகிச்சையில் உள்ளனர்.